**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**S.C.No.111 of 2022**

**Deposition of witness for PW-7**

பெயர் : ஈஸ்வர சம்பத்

தந்தை பெயர் : கஸ்தூரி ரங்கன்

முகவரி : நெ.36, சாய் நகர்,3 வது தெரு, குமரன் நகர் அருகில், சென்னை –82

வயது : 56

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of December 2025 .

---

**09.12.2025**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

1ம் எதிரி இஞ்ஞாசி மோசஸ், 2ம் எதிரி தமிழ் இசக்கி, 3ம் எதிரி சுரேஷ்குமார், 5ம் எதிரி ஆரோக்கியரூபன், 6ம் எதிரி ஆதிகேசவன், 7ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகியோர் ஆஜர். 4ம் எதிரி பாலாஜி இறந்துவிட்டார்.

**PW7– முதல் விசாரணை**

20.6.21ஆம் தேதி காலை 9.30 மணி அளவில் அரும்பாக்கம், அன்னை சத்யா நகர், 3வது தெருவில் நானும், அமரேசனும் நின்று கொண்டிருந்தோம். அப்போது அரும்பாக்கம் காவல் நிலைய பெண் ஆய்வாளர் அங்கு வந்து ஒரு நபரை காண்பித்து அவர் கொலை குற்றவாளி என்றும், பக்கத்து தெருவில் உள்ள அவரது வீட்டில் இருந்து அரும்பாக்கம், அன்னை சத்யா நகர், 2வது தெருவில் கதவு எண்.16 உள்ள அவரது வீட்டில் இருந்து இருசக்கர வாகனத்தை டியோ மஞ்சள் கலர் இருசக்கர வாகனம் பதிவு எண் TN 02, BL 1582 என்ற வாகனத்தை எடுத்து ஆஜர் படுத்தினார். அதனை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அதற்கு சாட்சியாக என்னிடமும், அமரேசனிடமும் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். கைப்பற்றுதல் மகசரில்

உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.7 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது. மேற்படி இருசக்கர வாகனம் தான் அந்த வாகனம் சான்று பொருள்.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>6 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

20.6.2021 ஆம் தேதி அரும்பாக்கம் பெண் காவல் ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் மகசரில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மகசரில் எந்த இடத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் எந்த இடத்தில் இருந்து இருசக்கர வாகனத்தை எடுத்தார்களோ அந்த இடத்தில் தான் கையெழுத்து செய்தேன். நான் சென்னை கொளத்தூரில் வசிக்கிறேன். கொளத்தூரில் இருந்து அரும்பாக்கத்திற்கு 6, 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நான் அரும்பாக்கம் கோல்டு கெஸ்ட் ஹவுஸில் 2021 ஆம் ஆண்டு ரிசப்ஷினிஸ்ட் ஆக வேலை செய்தேன். 2021 ஆம் ஆண்டு கோவிட் சமயம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கோவிட் கட்டுப்பாடு இருந்தது என்றால் சரிதான் 20.6.2021 ஆம் தேதி காலை 9.15 மணியளவில் நான் கெஸ்ட் ஹவுஸ் அரும்பாக்கம் ஏரியாவில் இல்லை என்றாலும், அந்த சமயத்தில் 6 ம் எதிரி ஆதி கேசவன் வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தை என் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்ற வில்லை என்றாலும், அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து பெறவில்லை என்றாலும் சரி அல்ல. 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான் அரும்பாக்கம் கோல்டு கெஸ்ட் ஹவுஸில் ரிசப்ஷினிஸ்ட் ஆக பணிபுரிந்தேன் என்ற விவரத்தை போலீஸ் விசாரித்த போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொளத்தூரில் வசிக்கும் நிலையில் சுமார் 7 கிலோமீட்டர் தூரம் உள்ள அரும்பாக்கத்திற்கு நான் வர

**வேண்டிய அவசியமே இல்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

//SD//

09.12.2025

IV Addl. Sessions Judge.
IV Additional Court.